பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை 31.08.2025 கதிர் 294

## இனி இது ரகசியம் அல்ல!

ரணில் மருத்துவமனையில் இருந்துவீடுதிரும்பிவிட்டார். அவரது கைது ஏற்படுத்திய பரபரப்புக்கள் இப்போது மெல்ல மெல்ல அடங்கி வருகின்றன. இந்த ☞2

### சர்வதேசமே நீதியை வழங்கு

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு கிழக்கில் நேற்றுப் போராட்டம்






சர்வதேச வலிந்து காணமல் ஆககப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டுவலிந்துகாணாமலாக் கப்பட்டவர்களுக்கு பொறுப்புக் கூறப்பட்டு நீதி நிலைநாட்டப் படவேண்டும்என்றுசர்வதேசத்தை வலியுறுத்திவடக்கிலும்,கிழக்கிலும் அவர்களின்உறவுகளால்ஏற்பாடு செய்யப்பட்ட பெரும் கவனயீர்ப்பு பேரணியும்,போராட்டமும்நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கில் செம்மணியிலும், கிழக்கில் காந்தி பூங்காவிலும் ☞2

## பிரபல பாடகர் கைதாகி பிணையில் விடுவிப்பு

பிரபலபாடகர்தமித்அசங்கவைவெல்லவாயபொலிஸார் கைதாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர், வெல்லவாய நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ☞2

### இந்தோனேசியாவில் கைதான

## பாதாள உலகக் குழுவினர் ஐவரும் நேற்றிரவு அழைத்து வரப்பட்டனர்

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழுவின் முக்கியஸ்தர்களான கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட ஐவரும் நேற்று இரவு நாட்டுக்கு விசேட பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்து வரப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் வுட்லர் தெரிவித்தார்.

இவர்கள் அழைத்து வரப்பட்ட போது ☞6

## நாளை முதல் இரு நாள்கள் வடக்கில் அநுரவின் பயணம்

அரசுத் தலைவர் அநுரகுமார நாளை திங்கட்கிழமை வடக்கு மாகாணத்துக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின் போது வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகருத்திட்டங்கள்அரசுத்தலைவரால் ☞6

### பொறுப்புக்கூறல் விடயத்தில்

# உள்நாட்டு விசாரணைகளை முற்காக நிராகரிக்கின்றோம்

### சர்வதேச விசாரணையே தேவை என்கின்றனர் காணாமலாக்கப்பட்டோரின் வடக்கு கிழக்கு உறவுகள்

பொறுப்புக்கூறல் விடயத்தில் உள்நாட்டு விசாரணைப் பொறி முறையை முழுமையாக நிராகரிப்பதோடு, சர்வதேச குற்றவியல் விசாரணையை நாம் வலியுறுத்துகின்றோம் என்று வட,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகள் மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா. பிராந்திய அலுவலகத்தில் குறித்த மனுவை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவர் கனகரஞ்சினி, செயலாளர் ☞6

## செப்டெம்பர் 6 ரணிலின் உரை

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க செப்டெம்பர் 6 விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், அன்றைய தினம் முன்னாள் அரசுத் தலைவர் இந்த விசேட உரையினை நிகழ்த்துவார் என்று கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ☞6

## வோல்கரின் அறிக்கையை எதிர்த்து தெற்கில் கையெழுத்து போராட்டம்

### முன்னாள் எம்.பி. சரத் வீரசேகரவின் ஏற்பாட்டில்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60ஆவது அமர்வு ஜெனீவாவில் செப்டெம்பர் 8 தொடங்கவுள்ளது. இந்தஅமர்வில், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டுர்க் இலங்கை தொடர்பான தனது புதிய அறிக்கையை வெளியிட உள்ளார். இந்தநிலையில்குறித்த ☞6

## ரணில், சஜித், மகிந்த, நாமல், மைத்திரி அனைவரும் கள்வர்கள்; குற்றமிழைத்தோர்

### அவர்களைக் கைது செய்வது இலகு என்கிறார் அமைச்சர்

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மஹிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சம்பிக ரணவக்க, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அனைவரும் கள்வர்களே. தாம் குற்றமிழைத்தவர்கள் என்பதால் ரணிலை கைது செய்யதவுடன் அச்சத்தில் இவர்கள் ஒன்றிணைந்துள்ளனர். இவர்கள் இணைந்தால் கள்வர்களை கைது செய்வது இன்னும் இலகுவாகும் என தொழிற் பயிற்சிகள் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ☞2

## 300 பொலிஸார் இந்த வருடம் பணியிலிருந்து இடைநிறுத்தம்

எதிர்க்கட்சிகள் அரச சேவையை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம். அரச சேவைக்கு பொறுத்தமற்றவர்கள் சேவையில் இருக்கக்கூடும். அவ்வாறான 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாண்டில் பணியிடை நிறுத்தம் ☞2

## செம்மணியில் மேலும் 10 பேரின் எலும்புகள் நேற்றுக் கண்டுபிடிப்பு






செம்மணிமனிதப்புதைகுழிகளில் ஒன்றான அரியாலை சிந்துப்பாத்தி புதைகுழிகளில் இருந்து இருந்து நேற்றுப் புதிதாக மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் அங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் எலும்பு எச்சங்களின் எண்ணிக்கை 197 ஆகியது.

செம்மணி மனித ☞6

## அரசுத் தலைவர் மாளிகைகளை சுற்றுலா விடுதிகளாக்க அழைப்பு

### அரசுத் தலைவர் அநுரகுமார விடுத்தார்

சுற்றுலா வலயங்களில் உள்ள அரசுத் தலைவர் மாளிகைளைச் சுற்றுலா விடுதிகளாக்குவதற்கு முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அரசுத் தலைவர் அநுரகுமார அழைப்பு விடுத்துள்ளார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிலையில், ரணிலின் கைது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையின் முன்னோடியே என்கின்றன ஆளும்தரப்பு வட்டாரங்கள்.

ஆளும்தரப்பிற்குள் இந்த விடயம் குறித்து முன்கூட்டியே விவாதிக்கப்பட்டு, வேண்டுமென்றே ரணிலின் கைது வரையில் விடயத்தை விரிவாக்கமடைய அனுமதித்து,- ஒரு முன்னாள் அரச தலைவர் காவலில் எடுக்கப்பட்டால் அதற்கெதிராக ஏற்கனவே உள்ள 'சிஸ்ரம்' எவ்வளவுதூரம் செயற்படும் என்பதைச் சோதிப்பதே ஆளும்தரப் ன் நோக்கம் என்றும் கூறப்படுகிறது.

ரணிலைக் கைது செய்வதன் மூலம் ஆளும்தரப்புத் 'தன்னைத்தானே முதுகில் குத்திக்கொண்டது' என்று எதிர்க்கட்சி குரல்கள் கூறுகின்றன, ஆனால் உண்மைவேறுபட்டது. இதுவரையில்-தீண்டப்படத்தக்கவர்கள் அல்லர் என்று நினைக்கப்பட்டோர் தொடப்படும்போது நீதி இயந்திரம் எவ்வாறு செயற்படும், பதிலளிக்கும் என்பதற்கான ஒரு நனவான பரீட்சார்த்த நடவடிக்கையே இது என்றார் ஆளும்தரப்புக்குள் உள்ள மிக முக்கியமான ஒருவர்.

ஆளும்தரப்பின் இந்தப் போக்கு குறித்து ரணிலுக்கும்கூட முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு எதிரான வழக்கு விசாரணை செல்லும் திசையை உணர்ந்த அவரது வழக்கறிஞர்கள், மோசமான நிலைக்குத் தயாராகுமாறு அவரை எச்சரித்தனராம். இருந்தாலும் ரணில் அது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என்பது, வெள்ளிக்கிழமை பிற்பகல், அவரைக் கைது செய்யும் தங்கள் முடிவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அவருக்கு முறையாகத் தெரிவித்த தருணம் ரணில் அடைந்த அதிர்ச்சி வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

கோட்டை நீதிவான் மன்றத்தில் பிற்பகலில் ஏற்பட்ட விசாரணைத் தடங்கல்கள், தாமதங்கள் ரணிலின் கைது மற்றும் அவரது விளக்கமறியல் குறித்த பல்வேறு கதையாடல்களுக்கு வழிவகுத்தது. மாலை 6.00 மணிக்கு, பிணை விண்ணப்பத்தின் மீதான தனது தீர்ப்பை 'அரை மணி நேரம்' நீதிபதி ஒத்திவைத்தார். அதற்கு பதிலாக, இறுதி முடிவு இரவு 10.00 மணி வரை இழுக்கப்பட்டது, இது வதந்திகளின் புயலைத் தூண்டியது. அரசுத் தலைவரிடமோ அல்லது பிற அதிகார மையங்களிடமோ ஆலோசனை பெறுவதற்காகவே தீர்ப்புத் தாமதிக்கப்படுகின்றது என்று பரவலாகக் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் அத்தகைய அழைப்பு எதுவும் எடுக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்படுகின்றது. என்ன நடக்கின்றது என்பதை மட்டுமே ஆளும்தரப்பிலிருந்தவர்கள் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். தலையிடப்படவில்லை. சிஸ்ரம் எப்படி இயங்குகிறது என்பதை அவதானிப்பதே ஆளும்தரப்பின் முக்கிய தேவையாக இருந்தது.

நீதிவானின் உத்தரவுக்குப் பிறகு, வெள்ளிக்கிழமை இரவு சிறைச்சாலை பேருந்தில் ரணில் கைவிலங்குகளுடன் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இருப்பினும், ரணிலின் முதல் இரவு சாதாரண கைதிகளுடன் அல்ல, மாறாக வெலிக்கடை சிறையில் சாதாரண வசதிகளுடன் கூடிய ஒரு சிறப்பு அறையில் கழிந்தது. அது சிறைச்சாலைக்குள் உள்ள ஒரு வகையான சாதாரண கழிப்பறை எனப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதிகள் எம்பிக்கள், சக்திவாய்ந்த செயலாளர்கள் மற்றும் கடந்த காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட சக்திவாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட சாதாரண வசதிகளுடன் கூடிய இந்த கழிப்பறையில் வைக்கப்பட்டனர்.

அந்த அறையில் இருந்த 'கொமோட்' சரியாக வேலை செய்யாததால், அதைப் பயன்படுத்துவது ரணிலுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது. அதனைச் சிறை ஊழியர்கள் சரிசெய்யும் வரை ரணில் காத்திருக்க வேண்டியிருந்தது. மேலும், வெள்ளிக்கிழமை காலை முதல் இரவு வரை ரணிலுக்கு உணவு அல்லது பானம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவுமில்லை, எனவே வெலிக்கடைக்கு வந்த பிறகு ரணிலுக்கு மிகவும் பசியாக இருந்தது. ரணிலின் உணவு வீட்டிலிருந்து சிறைச்சாலைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தாலும், உணவு ரணிலை அடைந்தபோது அதிகாலை 1.00 மணி ஆகிவிட்டது.

பசியுடன் இருந்த ரணில், உணவைப் பெற்றவுடன் எந்தத் தயக்கமும் இல்லாமல் அதைச் சாப்பிடத் தொடங்கினார். மேலும், இதற்கு முன்பு இதை அனுபவித்ததில்லை என்பதாலும், குறைந்தபட்ச வசதிகள் மட்டுமே இருந்ததாலும், அன்று ரணிலுக்கு நல்ல தூக்கம் வரவில்லை. அவருக்குப் பல நோய்கள் இருந்ததாலும் அவரைக் கவனித்த மருத்துவர்கள் மறுநாள் காலையில் ரணிலை தேசிய மருத்துவமனைக்கு மாற்றவும், வீட்டிலிருந்தே உணவு வழங்கவும் பரிந்துரைத்தனர்.

சிறைச்சாலைக்குச் சென்று சஜித் பிரேமதாச ரணிலைச் சந்தித்தபோது அவர் மிகவும் உடைந்த நிலையில் இருந்தார். தன்னை விடுவிப்பதற்கான போராட்டத்தைக் கைவிடாதீர்கள், இது ஆளும்தரப்பு மேற்கொள்ளும் அடக்குமுறை, இந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராடவேண்டும், அதற்கு சஜித் தலைமை தாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆளும்தரப்பு இவையெல்லாவற்றையும் அனுமதித்துவிட்டுப்பார்த்துக்கொண்டிருந்தது. ஏனெனில் இனிமேல் வரப்போகும் மிகப் பெரிய விடயங்களைக் கையாள்வதற்கான அனுபவம், பட்டறிவு அதற்குத் தேவையாக இருந்தது. அதனால் இனிமேல்தான் பெரிய ஆட்டங்கள் காத்திருக்கின்றன என்கின்றன ஆளும்தரப்பு வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## காணாமலாக்கப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வடக்கு

யாழ்ப்பாணம் கிட்டு பூங்கா முன்றலில் நேற்றுக்காலை 10 மணியளவில் ஒன்றுதிரண்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாக செம்மணி வீதியூடாக மனிதப் புதைகுழி காணப்படும் சித்துப்பாத்தி பகுதிக்கு அண்மையாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் வேதனைகளையும் நீதிக்கோரிக்கையினை சுமந்தவாறு வாகன ஊர்தி முன்செல்ல பேரணியாக அனைவரும் சென்றிருந்ததோடு தமிழின அழிப்புக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோசங்களை எழுப்பினார்கள்.



ஆக்கிரமிப்பு முடிவுறுத்தப்பட வேண்டும், தன்னாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும். இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு இறப்புச்சான்றுதழ் தான் பதில் என்றால் கொலை செய்தவர்கள் யார்? காணாமலாக்கப்பட்டவர்களுக்கு அரசின் பதில் என்ன? உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் செம்மணி மனிதப்புதைகுழியில் மரணத்தவர்களுக்காக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் வலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவியும், செயலாளரும் ஐ.நா. பிராந்திய அலுவலகத்தில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கான மகஜரையும் கையளித்தனர்.

### கிழக்கு

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி பழைய பாலத்திற்கு அருகில் உயிர்நீர்த்த உறவுகள் மற்றும் வலிந்துகாணாமலாக்கப்பட்டவர்களை தேடி உயிர்நீர்த்த உறவுகளை நினைவுகூரும் வகையில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து பேரணியானது ஆரம்பமானது.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் வேதனைகளையும் நீதிக்கோரிக்கையினை சுமந்தவாறு வாகன ஊர்தி முன்செல்ல வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் பேரணியானது மட்டக்களப்பு நகரை நோக்கிச்சென்றது.

ஆயிரக்கணக்கான வலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் காணாமல்போன தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் இந்தப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

புதிய கல்லடி பாலம் ஊடாக மட்டக்களப்பு பிரதான வீதியூடாக மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் ஊர்வலம் சென்றதுடன் காந்திபூங்காவில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவ்ஙுீயலாளர்கள் நினைவுத்தூபியில் தமிழ் மக்களின் உரிமைக்காக ஊடகப்பணியாற்றி படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் வகையில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.



போராட்டத்தில் பங்கேற்றவர்கள் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கிறோம், தமிழினவழிப்புக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை அவசியம் உள்ளிட்ட கோசங்களை எழுப்பினர்கள்.

போராட்டத்தினை வட,கிழக்கு மாகாண வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினால் ஐநா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு அனுப்புவதற்கான மகஜர் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அமலநாயகியால் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரணில்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசுத் தலைவரினதோ நாடாளுமன்றத்தினதோ அல்லது அமைச்சர்களதோ கடமையல்ல. அதற்காக பிரத்தியேக நிறுவனங்கள் உள்ளன. கடந்த ஆட்சி காலங்களில் இந்த நிறுவனங்கள் அப்போதைய ஆட்சியாளர்களின் இரும்பு பாதணிகளுக்கு இரையாகியிருந்தன. இதன் காரணமாக கடந்த காலங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் பலவீனப்படுத்தப்பட்டு இவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

ஆனால் தற்போது எமது ஆட்சியில் அவ்வாறான நிலைமை இல்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் ஆளும்தரப்பின் தலையீடு இல்லை. எனவே ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சி யானாலும் சட்டம் அனைவரும் சமமாக பிரயோகிக்கப்படுகிறது. வரலாற்றில் எந்த ஆட்சியிலும் இவ்வாறு பாகுபாடின்றி சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இழைத்த குற்றங்களையும் தவறுகளையும் மறைக்க முடியாது. அவர் இழைத்த குற்றங்களில் ஒன்றுக்கு மாத்திரமே விளக்கமறியலுக்குச் சென்றார். ஆனால் இன்னும் பல கிடப்பில் உள்ளன. தம்மை பிரபலமானவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் யார்? அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து தமது நோய்களுக்காக நிதி பெற்ற அவர்கள் பிரபலங்களா? நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் புலமைப் பரிசில் பெற்று கற்றுக் கொண்டிருக்கின்றார்.

இவர்கள் தம்மை பிரபலங்கள் எனக் கூறிக் கொண்டு நாட்டில் தேசிய சொத்துக்களை அழித்தவர்களாவர். அவர்கள் இன்று பிரபலங்கள் என்ற நிலையிலிருந்து இறக்கப்பட்டு சாதாரண பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் அவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் கள்வர்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மஹிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சம்பிக ரணவக்க, மைத்திரிபால சிறிசேன அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

இவர்கள் அனைவருமே குற்றமிழைத்தவர்கள். ஆங்காங்கு ஒழிந்திருந்த அவர்கள் தற்போது ரணில் கைது செய்யப்பட்டுள்ளதால் அச்சமடைந்துள்ளனர். எனவே இவர்கள் ஒன்றிணையும் போது பெரிய பூட்டு ஒன்றைப் பூட்டினால் அனைவரையும் ஒரே சந்தர்ப்பத்தில் கைது செய்ய முடியும். தாம் குற்றவாளிகள் என்பதை தெரிந்து கொண்டு தான் அவர்கள் ஒன்றிணைந்து தப்பிக்க முயற்சிக்கின்றனர் என்றார்.

## 300 பொலிஸார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

மஹரகம நகரசபையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிகள் அரச சேவையை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அஞ்ச வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம். எவராயினும் நேர்மையாக பணியாற்றினால் யாருடைய அச்சுறுத்தலுக்கும் பயப்பட வேண்டிய நிலமை ஏற்படாது. அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கான சேவையை சரிவர நிறைவேற்றும் பட்சத்தில் நாம் அவர்களைப் பாதுகாப்போம்.

எவ்வாறிருப்பினும் அரச சேவைக்கு பொருத்தமற்ற சிலர் இருக்கலாம். பொலிஸில்கூட அவ்வாறானவர்கள் இருக்கக்கூடும். அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் செய்த சட்ட விரோத செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாகும். அதற்காக சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபபவர்கள் தொடர்ந்தும்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# பிணைமுறி, பட்டலந்த வழக்குகளில் கைதாகியிருந்தால் ரணிலுக்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்திருக்கமாட்டா

## முன்னாள் எம்.பி. திஸநாயக்க தெரிவிப்பு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முயற்சித்துள்ளார். பிணைமுறி மோசடி மற்றும் பட்டலந்த விவகாரத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்திருந்தால் எவரும் ஒன்றிணைந்திருக்கமாட்டார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்க

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை முறையற்றது. அரசதலைவர் என்ற அடிப்படையில் அரசுத்தலைவரால் மேற்கொள்ளப்படும் அரசமுறைப் பயணங்கள் தனிப்பட்டவை என்று குறிப்பிடுவது சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் பிரச்சினைக்குரியதாகவே காணப்படுகிறது.

அரசுத் தலைவர், பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மேற்கொள்ளும் வெளிநாட்டு பயணங்கள் அனைத்தும் அரசமுறைப் பயணங்களா என்பதிலும் பிரச்சினை காணப்படுகிறது. ஆகவே அரசமுறை பயணம் தொடர்பில் சட்டத்தின் ஊடாகவே ஒரு உரிய கண்காணிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முயற்சித்துள்ளார். இந்த முயற்சி எந்தளவுக்கு வெற்றிப்பெறும் என்பது சந்தேகத்துக்குரியதே,

பொருளாதார நெருக்கடியின்போது அரசியல் கட்சிகள் ஏதும் ஒன்றிணையவில்லை. அனைத்துத் தரப்பினரும் தமது எதிர்கால அரசியல் நோக்கினை மாத்திரம் கருத்திற்கொண்டு செயற்பட்டனர். அன்று அனைவரும் ஒன்றுப்பட்டிருந்தால் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றியிருக்காது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் தமது அதிகார பற்றினை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டன.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பட்டலந்த சித்திரவதை முகாம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் எதிர்கட்சிகள் ஏதும் ஒன்றிணைய போவதில்லை என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்ள முடியும் என்றார்.

# காணாமலாக்கப்பட்டோருன் நீதியை உறுதிப்படுத்த இலங்கை ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

உண்மையை அறிந்துகொள்வதற்கும், நீதியை நாடுவதற்குமான உரிமை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அவர்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்குரிய செயற்திறன்மிக்க நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வருடாந்தம் ஓகஸ்ட் 30 வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அரச அதிகாரிகளால் அல்லது அவர்களால் கட்டளையிடப்படுவோரால் இரகசியமாகக் கடத்தப்பட்டு, பின்னர் அவர்கள் எங்கே என்பது பற்றிய உண்மையை வெளிப்படுத்துவதற்கு மறுப்பதன் ஊடாக நிகழும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் பற்றியும், அதனால் அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவர்கள் சார்ந்த சமூகத்துக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் விழிப்புணர்வூட்டும் நோக்கில் இத்தினம் 2010 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இது வலிந்து காணாமலாக்குவதை நிறுத்துமாறும், அத்தகைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், குற்றவாளிகளைத் தண்டிக்குமாறும், உண்மையை வெளிப்படுத்துமாறும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான இழப்பீட்டை வழங்குமாறும், வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து சகல தரப்பினரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தை உரியவாறு பின்பற்றுமாறும் அரசுகளை வலியுறுத்துவதற்கான தினமாகும்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்குப் பதிலின்றி வாழும் குடும்பங்கள் முகங்கொடுத்துவரும் பெருந்துயரத்தை எம்மால் உணரமுடிகிறது. வலிந்து காணாமலாக்கப்படல் என்பது மிகமோசமான மனித உரிமை மீறல் என்பதுடன் அதனூடாக உரிமைகளின் அடிப்படையான கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி என்பன தகர்க்கப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாமலாக்கப்படல் என்பது தீவிர கரிசனைக்குரிய மனித உரிமைசார் பிரச்சினையாகக் காணப்படுவதாக நாம் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இவ்விவகாரம் தொடர்பில் செயற்திறன்மிக்க விசாரணைகளை முன்னெடுத்தல், உண்மைகளைக் கண்டறிதல், இழப்பீடுகளை வழங்கல் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல் என்பன அரசின் பொறுப்பு எனவும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியிருக்கிறோம். உண்மையை அறிந்துகொள்வதற்கும், நீதியை நாடுவதற்குமான உரிமை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இருக்கிறது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# கோமாரியில் கோர விபத்து பலர் காயம்; ஒருவர் சாவு

(பாறுக் ஷிஹான்)

கோமாரிப் பகுதியில் பேருந்தொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 52 பேர் காயமடைந்தனர்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் கோமாரி பகுதியில் நேற்று மாலை கெப்பட்டிபொல பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற பேருந்தொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதற்கு சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் விபத்தில் உயிரிழந்தவர் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்தில் சிக்கியவர்கள் வெலிமடையில் இருந்து இன்று காலை பயணத்தை மேற்கொண்டு அம்பாறை தீகவாபி ராஜமாக விகாரைக்கு வருகை தந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு செல்லும் வழியில் கோமாரியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொத்துவில் மற்றும் திருக்கோவில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதிக்கான குரலுக்கு மதிப்பளியுங்கள்

ஆவணி 30 உலகளவில் காணாமலாக்கப்பட்டவர்களை நினைவுகூரும் சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்தத் தினத்தில் நேற்று இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெருக்களில் இறங்கி, தமது அன்பினரைத் தேடி துயரம் சுமந்த குரல்களைக் கிளப்பினர். அவர்கள் கையில் புகைப்படங்கள், புலம்பல்கள், கோரிக்கைகள் மட்டுமின்றி, நீதி வேண்டிய பேராசை இருந்தது. இது வெறும் வருடாந்தப் போராட்டமல்ல. அது நெஞ்சங்களை உலுக்கும் சமூகத்தின் தொடர்ந்த கேள்வி ஆகும்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா பகுதிகளிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என அனைவரும் தங்கள் உயிரின் துணையினரை இழந்த வேதனையை வெளிப்படுத்தினர். பலரது கைகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் தேடியும் இன்னும் கிடைக்காத அன்புக்குரியவர்களின் புகைப்படங்கள் இருந்தன. அந்த புகைப்படங்கள், மக்களின் கண்களில் உருகும் கண்ணீருடன் கலந்து, அரசுக்கும் உலகிற்கும் ஒரே கேள்வியை மீண்டும் வலியுறுத்தியது:

'எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் கணவர்கள் எங்கே? எங்கள் அப்பாக்கள் எங்கே?' என்ற அவர்களின் அழுகுரல்கள் இன்னமும் ஆட்சியாளர்களின் மனங்களை அசைக்காமல் இருப்பது வேதனையளிக்கிறது. காணாமலாக்கப்படுதல்களால் ஏற்படும் துயரங்களை நன்கு அறிந்திருக்கக்கூடிய ஆட்சியாளர்களும் ஆளும்தரப்பில் இருக்கின்றபோதும் இவர்களின் குரல்கள் கவனிக்கப்படாமல் இருப்பது மிகப் பெரும் சாபக்கேடு.

இதே நாளில் இலங்கைக்குப் புறம்பாகவும் ஆதரவு குரல்கள் எழுந்தன. குறிப்பாக லண்டன் நகரில் தமிழ் சமூகத்தினர் ஒன்று கூடிக் கொண்டு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி போராட்டம் நடத்தினர். இந்த நிகழ்வு, காணாமற்போனோரின் பிரச்சினை உள்ளூருக்குள் மட்டுமல்ல, சர்வதேசளவிலும் இடம் பெற்றுள்ளதாக காட்டுகிறது. உலக நாடுகள் பலவும் இதை கவனமாகப் பார்க்கத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கேள்வி இன்னும் திறந்த புண் போல் உள்ளது. மக்கள் தினமும், மாதந்தோறும், வருடந்தோறும் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல அரசுகள் மாறியுள்ளன. விசாரணை குழுக்கள் அமைக்கப்பட்டன. அறிக்கைகள் எழுதப்பட்டன. ஆனால் அவற்றின் முடிவுகள் மக்கள் கண்ணீரைத் துடைக்கவோ, உண்மையை வெளிக்கொணரவோ இயலவில்லை.

ஒரு சமூகம் தனது அடிப்படை உரிமைகளை இழந்தால், அது தன்னைத்தானே கேள்வி கேட்கும் நிலைக்குத் தள்ளப்படும். காணாமற்போனோரின் பிரச்சினை அதுபோல ஒன்று. மக்கள் அரசிடம் நம்பிக்கை வைத்து நீதியை எதிர்பார்த்தனர். ஆனால் காலம் கழிந்தும் அவர்கள் குரல்களுக்கு சரியான பதில் இல்லை. இது நம்பிக்கையை மட்டுமின்றி, சமூக அமைதியையும் பாதிக்கின்றது.

காணாமற்போனோர் தொடர்பான கேள்வி, வெறும் கடந்த காலத்தைப் பற்றியதல்ல. அது எதிர்கால நீதியையும் குறிக்கிறது. உண்மையை வெளிப்படுத்தாமை, பொறுப்புக்கூறாமை, அடுத்த தலைமுறைக்கும் அச்சத்தை விதைக்கிறது. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்று கண்ணீர் சிந்தும் போது, நாளைய தலைமுறையினர் ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சியின் மீது சந்தேகத்துடன் வளர வேண்டிய சூழல் உருவாகிறது.

இந்த நிலையில் சர்வதேச சமுதாயத்தின் பங்கு முக்கியமாகிறது. லண்டனில் நடைபெற்ற போராட்டம், வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மட்டுமின்றி, மனித உரிமைகளை முன்னிறுத்தும் அனைவருக்கும் ஒரு அழைப்பாகும். உலக நாடுகள், இலங்கையைச் சுட்டிக்காட்டி, உண்மையான விசாரணை, வெளிப்படை தகவல் வெளியீடு மற்றும் நீதி வழங்கல் ஆகியவற்றை வலியுறுத்த வேண்டும். இல்லையெனில், காணாமற்போனோரின் பிரச்சினை தொடர்ந்து உலக மனித உரிமை அரங்குகளில் பேசப்படும்.

இந்நிலையில் இலங்கை ஆளும்தரப்பும் மௌனமாக இருக்கக்கூடாது. ஆளும்தரப்பு விரைவாக உண்மையை வெளிப்படுத்தும் செயல்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். குடும்பங்களின் கோரிக்கைகளை மதித்து, குறைந்தபட்சம் அவர்கள் அன்பினரின் நிலை குறித்த உண்மையான தகவல்களை அளிக்க வேண்டும். அது மனிதநேய கடமையாக மட்டுமின்றி, அரசின் சட்டப்பூர்வப் பொறுப்பாகவும் உள்ளது.

ஆக, காணாமலாக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தில் நடைபெற்ற வடக்கு–கிழக்கு போராட்டங்கள், உலகிற்கே ஒரு மீண்டும் மீண்டும் எழும் எச்சரிக்கை மணி. 'இந்த குரல்களை நீங்கள் புறக்கணிக்க முடியாது' என்பதே அந்த செய்தி.

மக்களின் கண்ணீரும் குரலும், நாளுக்கு நாள் பலமாகிக் கொண்டே செல்கின்றன. ஒருநாள் கண்டிப்பாக உண்மை வெளிப்படும். ஆனால் அந்த நாளை விரைவாகக் கொண்டு வருவது அரசின் பொறுப்பு.

அந்த உண்மை வெளிப்படும் நாள்தான், இலங்கை உண்மையில் அமைதியும் நீதியும் கொண்ட நாடாக மாறும் நாள்.

# லண்டனிலும் நேற்று ஆர்ப்பாட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்காக லண்டனிலும் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான நேற்று வடக்கு கிழக்கில் போராட்டங்கள் இடம்பெற்ற சமயத்தில் லண்டனிலும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாக இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா உயர் ஆணையரகத்திலிருந்து பிரித்தானிய பிரதமர் அலுவலகம் வரைக்கும் பேரணியாக சென்ற புலம்பெயர் தமிழ் உறவுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் என்று குரல் எழுப்பினர். குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்க கோரியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

# சீனன்குடா பொலிஸ் நிலையம் முன் முத்துநகர் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை - முத்து நகர் விவசாயிகள் இன்று காலை சீனக்குடாப் பொலிஸாருக்கு எதிராக சீனாக்குடா பொலிஸ் நிலையத்துக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டத்தை நியாயமாக அமுல்படுத்தாமல் தங்கள் நிலங்களை ஆக்கிரமித்த நிறுவன உரிமையாளர்கள் தங்களைத் தாக்கிய சம்பவம் குறித்து முறைப்பாடளிக்க சீனாக்குடாப் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்தவர்களை அநியாயமாக கைது செய்ததற்காக சீனக்குடா பொலிஸாருக்கு எதிராக அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்ய வெள்ளிக்கிழமை சீனாக்குடா பொலிஸிக்குச் சென்றபோது முத்து நகர் விவசாயிகள் சீனக்குடாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதே நேரத்தில் நிறுவன உரிமையாளர்களின் தாக்குதலில் காயமடைந்த மற்றொருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், சீனக்குடாப் பொலிஸார் மற்ற தரப்பினரை கைது செய்யவில்லை என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.

இன்று காலை, சுமார் 300 விவசாயிகள் சீனக்குடாப் பொலிஸாருக்கு எதிராகப் பேரணியாகச் சென்று தங்களுக்கு நீதி கோரி சீனாக் குடாப் பொலிஸ் நிலையம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது, அந்த நேரத்தில் போலீசார் கேட்டை மூடிவிட்டு யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை, இதனால் கடுமையான பாதுகாப்புவழங்கப்பட்டது.

# இந்துமத எழுச்சியாக இடம்பெற்ற காரைதீவு – மண்டூர் பாதயாத்திரை

## 5000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்பு

(சகாதேவராஜா)



இந்துமதஎழுச்சியாககாரைதீவு - மண்டூர் பாதயாத்திரை நேற்று உணர்வுபூர்வமாகஇடம்பெற்றது. சுமார் 5000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்றனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த தலபாதயாத்திரை நேற்று 30ஆம் தேதி சனிக்கிழமை காரைதீவிலிருந்து அதிகாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியது.

ஆலய வருடாந்த மகோற்சவம் செப்டெம்பர் 07 தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரையாக அலங்கரிக்கப்பட்ட முருகப்பெருமான் படங்களுடன் நந்திக் கொடி சகிதம் ஏழு உழவு இயந்திரங்கள் நகர அடியார்கள் பேரணியும் நகர்ந்தது.

அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க யாத்திரை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பஜனைகள் குழுவினரின் பஜனை பக்திப் பாடல்களும் வழிநெடுகிலும் இடம்பெற்றன

சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்கு அடியார்கள் அணி நீண்டிருந்தது. காவடியாட்டமும் இடையே இடம்பெற்றது.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் இந்தப் பெரும் பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்ட பாதயாத்திரை கல்முனை நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு கிட்டங்கி நாவிதன்வெளி வேப்பையடி தம்பலவத்தை ஊடாக பகல் 12 மணியளவில் மண்டூரைச் சென்றடைந்தது.

இடையில் பல இந்து அன்பர்கள் அடியார்களுக்கு நீராகாரம் காலையுணவு தண்ணீர் போத்தல்கள் பழரசம் பால் சோறு என்று தாராளமாக வழங்கினார்கள்.

தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித் மற்றும் அவரது சகோதரர் ஜீவராஜா( லண்டன்) ஆகியோர் சுமார் 7000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






## 300 பொலிஸார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் நீடிக்க முடியாது. இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 300 பொலிஸார் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தவறிழைப்பவர்களை எக்காரணத்துக்காகவும் அரச சேவையில் வைத்திருக்கப் போவதில்லை. அதேபோன்று ஏனைய துறைகளிலும் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த நிறுவனங்களின் பிரதானிகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மக்களின் அபிலாஷைகளைஉணர்ந்துபணியாற்றுமாறு சகல அரச உத்தியோகத்தர்களையும் கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறு செய்தால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் முன்னோக்கி பயணிக்க முடியும் என்றார்.

## நாளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கி வைக்கப்படவுள்ளன.

அரசுத் தலைவர் நாளை திங்கட்கிழமை வடக்கு மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்குச் சென்று துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தி பணிகளை தொடங்கி வைக்கவுள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் யாழ். நூலக அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக யாழ். நூலக அபிவிருத்தி பணியை அரசுத் தலைவர் சம்பிரதாய பூர்வமாக தொடங்கி வைக்கவுள்ளதுடன், யாழ்.நூலகத்தில் நடைபெறும் விசேட நிகழ்விலும் கலந்துக்கொள்ளவுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கடவுச்சீட்டு அலுவலகத்தையும் அரசுத் தலைவர் திறந்து வைக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மண்டைதீவுப் பகுதியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானத்துக்கான அடிக்கல் நாட்டல் நிகழ்விலும் அரசுத் தலைவர் கலந்துக்கொள்ளவுள்ளார்

செப்டெம்பர் 2, செவ்வாய்க்கிழமை அரசுத் தலைவர் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக்குபயணம்செய்து 'தென்னை தினம்' அபிவிருத்தி கருத்திட்டத்தை தொடங்கி வைக்கவுள்ளார். அத்துடன் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் நிர்மாணிப்புக்கான அடிக்கலையும் நாட்டவுள்ளார்.

அத்துடன் பளை பகுதியில் தென்னை நாற்று உற்பத்தி நிலையத்தையும் அரசுத் தலைவர் திறந்து வைக்கவுள்ளார்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. நேற்று சனிக்கிழமைஆறாவதுநாளாகவும்தோண்டும் பணி முன்னெடுக்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தின் 38ஆவது நாள் பணியாக இது அமைந்தது. இரண்டாம் கட்டத்தில் 45 நாள் பணிகளுக்கு நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது.

இதுவரையான இரண்டு கட்ட அகழ்வுகளிலும், 47 நாட்களில் 181 எலும்புகூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரையில் 197 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## பாதாள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் உள்ளேயும் வெளியேயும் பலத்த பாதுகாப்பு காணப்பட்டது. அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, விசேட அதிகரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர், ஊடகப் பேச்சாளர் வுட்லர் உள்ளிட்ட பலரும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக விமான நிலையத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

முன்னதாக நேற்று அதிகாலை குறித்த பாதாள உலகக் குழுவினரை அழைத்து வருவதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று இந்தோனேசியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தது. ஏற்கனவே இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சி.ஐ.டி.) தங்கியிருந்த நிலையில் அவர்களுடன் இணைந்து கைது செய்யப்பட்ட கெஹல்பத்தர பத்மே உள்ளிட்டவர்களை நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டன.

அதன்பிரகாரம்பிற்பகல்3.30மணியளவில் ஜெகர்த்தாவிலிருந்து கட்டுநாயக்க நோக்கி புறப்பட்ட விமானத்தில் குறித்த பாதாள உலகக் குழுவினர் விசேட பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்து வரப்பட்டனர். குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை இரவு 7.20க்கு வந்தடைந்திருந்தது. அதைத் தொடர்ந்து குறித்த குழுவினர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனிடையே, இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பிலான சந்தேகநபரான பெக்கோ சமனின் மனைவி மற்றும் குழந்தை ஆகியோர் வெள்ளிக்கிழமை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அவர்களிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கெஹல்பத்தர பத்மே மற்றும் அவரது கூட்டாளிகள் சட்டவிரோதமாகச் சம்பாதித்ததாகக் கூறப்படும் சொத்துக்கள் குறித்து பொலிஸார் விசாரணைகைளை தொடங்கிள்ளனர்.

## உள்நாட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிதா ஆகியோர் கையளித்தனர். அதன் பிரதிகளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை, மனித உரிமை பேரவை உறுப்புநாடுகளின்தூதுவர்கள்ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தமனுவில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம், உலகளவில் அதிக எண்ணிக்கையிலான காணாமல் போனவர்களைக் கொண்ட ஒரு நாட்டில் நீதிக்கான எங்கள் போராட்டத்தில் உறுதியாக இருந்து வருகிறோம். இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், நீதியை நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகத்தை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறோம்.

முள்ளிவாய்க்காலில் உச்சக்கட்டத்தை அடைந்த இலங்கையின் இனப்படுகொலைப் போரின் இறுதிக் கட்டத்தில், 146,679 பேர் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர், அவர்களது உறவினர்களால் இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் 21,000 க்கும் மேற்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டு பலவந்தமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின்

ஒரு திட்டமிட்ட தந்திரோபாயமாக இலங்கையால் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் நிகழ்த்தப்பட்டுள்ளது இது அவர்களின் திட்டமிட்ட இனவழிப்புக்கு கணிசமாக பங்களித்துள்ளது,

போரின் இறுதிக் கட்டத்தில், 59 க்கும் மேற்பட்ட குழந்தைகள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர், பின்னர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என சர்வதேசத்திடம் நீதி வேண்டி தொடர்ந்து போராடி வருகிறோம்

59 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் வலுக்கட்டாயமாககாணாமல்ஆக்கப்படுவதில் இலங்கை உலகில் முன்னணியில் உள்ளது. சிறுவர் உரிமைகளை நிலைநிறுத்தவும், இனப்படுகொலையை வரையறுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசை திருப்திப்படுத்துவதும் கால அவகாசம் கொடுப்பதும் எமது மக்களுக்கு ஆழ்ந்த வேதனையை அளிக்கின்றது,

போர் முடிவடைந்த பின்னர், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் 350 க்கு மேற்பட்ட உறவினர்கள் நீதிக்காக போராடும் போது, தங்கள் அன்புக்குரியவர்களிற்கு என்ன நடந்தது என அறியாமலே இறந்துள்ளனர்.

இலங்கையில்இதுவரைகண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி மன்னாரில் உள்ள சதொசா புதைகுழி ஆகும் அங்கு 28 சிறுவர்களின் எலும்புக் கூடுகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இலங்கையில் இரண்டாவது மனிதப் புதை குழியாக தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் செம்மணி சித்துப்பத்தி இந்துமயான புதைகுழி பதிவாகியுள்ளது குழந்தைகள் உட்பட 169 பேரின் எலும்புக்கூடுகள்அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கொக்குத்தொடுவாய் மனிதபுதை குழியின் அகழ்வுப்பணி நிறைவடைந்த நேரத்தில் 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. மேற்படி புதைகுழி எவையும் விசாரிக்கப்படவில்லை.

அத்துடன் எமது தாயகத்தின் ஏனைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிங்கள இராணுவம்மற்றும்சிங்களகாடையாளர்களால் எம்உறவுகள்கொல்லப்பட்டுபுதைக்கப்பட்டதாக அடையாளப்படுத்தப்படும் இடங்களும் அகழ்வுப்பணி நடைபெறவேண்டும் எனவே சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என ஐ நா மன்றத்தை கோருகின்றோம்.

இலங்கை தொடர்பாக கடந்த ஓகஸ்ட் 8 பு/ஹூியூளீ/60/21 இலக்கமிட்ட தங்களது அறிக்கை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சில அடிப்படை பிரச்சனைகளை குறிப்பிட்டுள்ளது அந்த அறீக்கையில் நீங்கள் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, குற்றவாளிகள் , தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட சர்வதேச போர் குற்றங்களுக்கு நீண்ட காலமாக தாமதித்து வந்த நீதியையும் பொறுப்பு கூறலை உறுதிசெய்யவும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கிடைத்த வரலாற்று வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளைமாறு இலங்கை அரசுக்கு இராஜதந்திர அடிப்படையில் நீங்கள் அழைப்புவிடுத்துள்ளீர்கள் பொறுப்புக்கூறல் தொடர்பான தங்களது மேற்படி கருத்து கடந்த 76 ஆண்டுகளாக அரசினால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்ந்தும் கட்டமைப்புசார் இனவழிப்புக்கு முகம் கொடுத்தவாறு சர்வதேச நீதிக்காக காத்திருக்கும் தமிழ் மக்களாகிய எமக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வருகின்ற செம்டெம்பர் மாதம் தொடங்கவுள்ள ஐ நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உரியவர்களுக்கு சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக உண்மை கண்டறியப்பட்டபதில்விரைந்துவழங்குவதுடன் ,பாதிக்கப்பட்டோரின்சாட்சியங்களைபாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் .திட்டமிட்ட இனப்படுகொலை மேற்கொண்ட இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்தி விசாரனை ஆரம்பிக்க தீர்மானம் நிறைவேற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும் உறுப்பு நாடுகளையும் கோருகின்றோம் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்குநீதியைவழங்குவதற்காகசர்வதேச பொறிமுறைகளின் ஊடாகவும் தீர்க்கமான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

போர் முடிவடைந்து 16 வருடங்களாக நீதி கோரியும் பின் இன்றுடன் 3114 நாட்கள் தொடர்ச்சியாக வீதிப் போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம்எமதுபோராட்டத்தை இலங்கை அரசால் அடக்க முடியாது. இன்று, எங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தேடுவதற்கும் இனப்படுகொலைக்கான நீதியை சர்வதேச பொறிமுறைகள் மூலம் தேடுகின்ற எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் என்றுள்ளது.

## வோல்கரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கைக்கு எதிர்ப்பினை வெளியிடும் ஆவணத்தில் பொது மக்களிடம் கையெழுத்து பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் வடக்கு கிழக்கில் கையெழுத்துப் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக தெற்கில் கையெழுத்து வேட்டை நடத்த முன்னாள் கடற்படைத்தளபதியும்பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர நடவடிக்கை எடுத்துள்ளார்.

உயராணையர்வோல்கர்சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் இலங்கையில் காணப்படும் மனித உரிமை நிலை, சட்ட நடைமுறைகள் மற்றும்அரசின்ஒத்துழைப்புகள்குறித்தமதிப்பீடு இடம்பெறவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானதுஇலங்கைஇராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும்செயற்பாடாகும்என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அந்தவகையிலேயே இதற்குஎதிர்ப்பினை வெளியிடும் நோக்கில் பொது மக்களிடம் கையெழுத்துசேகரிக்கவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கையெழுத்து சேகரிக்கும்நடவடிக்கைகள்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு 8இல் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் தொடங்கப்பட்டது. பௌத்த மதகுமாரர், முன்னாள் இராணுவத்தினர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

அத்தோடு நாளை திங்கட்கிழமை கொழும்பு- புறக்கோட்டை, கண்டி, குருணாகல், களுத்துறை, சிலாபம், கம்பஹா, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி உள்ளிட்ட பிரதான நகரங்களில் பொது மக்களின் கையெழுத்து சேகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணத்தை கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஐ.நா. அமர்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை சார்பில் உரையாற்றவுள்ளார். அவர் தனது உரையில் நாட்டின் தற்போதைய அரசியல், ஜனநாயக மற்றும் மனித உரிமை நிலைப்பாடுகளை சர்வதேச சமூகத்திற்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை பிரித்தானியா மற்றும் கனடா இணைந்து, இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்றை முன்வைக்கவும் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செப்டெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கடந்த 26ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்ததோடு நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமைகொழும்புதேசிய வைத்தியசாலையில் வீடுதிரும்பியிருந்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2025இல் வெளியிடப்பெற்றது